| | | | |
|---|---|---|---|
| 1. | திருக்கோயில் பெயர் | : | அ/மி ஏகாம்பரநாதர் திருக்கோயில் காஞ்சிபுரம் |
| 2. | வேறு வழக்கு பெயர்கள் | : | ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர், கச்சி ஏகம்பம், திருவேகம்பம் |
| 3. | முகவரி | : | ஏகாம்பரநாதர் சன்னதி தெரு, பெரிய காஞ்சிபுரம்<br>காஞ்சிபுரம் – 631 502. |
| 4. | திருக்கோயில் அருகில் உள்ள பேருந்து நிறுத்தம் | : | சங்கர மடம் பேருந்து நிறுத்தம். |
| 5. | திருக்கோயிலுக்கு அருகில் உள்ள ரயில் நிறுத்தம் | : | காஞ்சிபுரம் (மேற்கு) ரயில் நிலையம் புதியது கம்மாளத் தெரு, அருகில் பெரிய காஞ்சிபுரம். |
| 6. | இறைவன் பெயர் (எத்தனை பெயர் இருந்தாலும் குறிப்பிடுக) | : | அருள்மிகு ஏகாம்பரநாதர், அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர், திரு வேகம்பம், திருகச்சி ஏகம்பம் |
| 7. | உற்சவர் பெயர் | : | அருள்மிகு ஏகாம்பரநாதர் |
| 8. | இறைவி பெயர் | | அருள்திரு. ஏலவார் குழலி அம்மை |
| 9. | இறைவன் திருக்கோலம் | : | இறைவன், இறைவி ஆகிய இருவரும் திருமணக்கோலத்தில் காட்சியளித்தல் |
| 10. | இறைவி திருக்கோலம் | : | மூலவர் சன்னதி இல்லை |
| 11. | இராஜகோபுரம் உள்ளதா ? | : | உள்ளது. |
| | அ. எத்தனை | : | மூன்று இராஜகோபுரம் |
| | ஆ.சிறப்பு பெயர் இருந்தால் குறிப்பிடவும் | : | 1.தெற்கு இராஜகோபுரம், 2. பல்லவ இராஜகோபுரம் |
| | இ. காரணப்பெயர் இருந்தாலும் குறிப்பிடவும் | : | 3.மேற்கு இராஜகோபுரம். |
| 12. | சுற்றுப் பிரகார சன்னதிகள் நுழைவாயிலிலிருந்து இடப்புறத்திலிருந்து வலப்புறம் வரை குறிப்புகள் | : | 1.பிரளயகால அம்மன் சன்னதி, 2.உற்சவர் சன்னதி, 3.விகட சக்கர விநாயகர், 4. சகஸ்ர லிங்கம், 5. மாவடிக் கந்தர், 6. உற்சவர் |

அம்மன், 7. ஸ்ரீ நடராஜர் சன்னதி, 8.பைரவர் சன்னதி, 9. நவக்கிரகம்.

13. கொடி மரம் பற்றிய குறிப்பு : “63” அடி உயரம் தேக்கு மரத்தினால் ஆனது. 2006 ல் நிறுவப்பட்டது.

14. பலிபீடம் பற்றிய குறிப்பு : கல்லால் ஆன பலி பீடம்.

15. தீர்த்தம் உள்ளதா ? : உள்ளது.

அ. தீர்த்தத்தின் பெயர் : 1.சிவகங்கைத் தீர்த்தம் 2.கம்பா நதித் தீர்த்தம் 3.மங்கள தீர்த்தம் 4. சர்வதீர்த்தம்.

ஆ. அமைவிடம் : திருக்கோயில் உட்புறம்
1. சிவகங்கைத் தீர்த்தம், 2. கம்பா நதித் தீர்த்தம்.
திருக்கோயில் வெளிப்புறம் :
1.மங்கள தீர்த்தம் 2. சர்வதீர்த்தம்.

16. கருவறை உள்ள இறைவனின் பெயர் : அ/மி ஏகாம்பரநாதர் (அ) அ/மி ஏகாம்பரேஸ்வரர்

17. பாடல் பெற்றுள்ளதா யாரால் ? அதைப் பற்றிய விவரம் : அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர், (வந்து பாடியவர்கள்)
மாணிக்கவாசகர் (வராமல் பாடியவர்)

18. மங்களா சாசனம் பெற்றுள்ளதா யாரால் ? அதைப்பற்றிய விவரம் ? : இத்திருக்கோயிலின் முதல் பிரகாரத்தில் உள்ள நிலாத்துண்ட பெருமாள் திருமங்கை ஆழ்வரால் மங்களா சாசனம் பெற்றுள்ளது.

19. திருக்கோயில் பற்றிய இலக்கிய குறிப்புகள் ? : பட்டினப்பாலை, இரட்டைப் புலவர்கள், பட்டிணத்து அடிகள்.

20. கால பூஜையின் விவரங்கள் எத்தனை காலம் என்ன என்ன ? : காமிகா ஆகமம் , 6 கால பூஜைகள்:
1.உஷக் காலம், 2. காலசந்தி, 3. உச்சிக் காலம், 4.பிரதோஷம் காலம், 5. சாயரக்ஷை, 6. அர்த்த ஜாமம்.

21. வார பூஜைகள் விவரம் : திங்கட் கிழமை விசேஷம் (சோமாவாரம்)

| | | | |
|---|---|---|---|
| 22. | மாத பூஜைகள் விவரம் | : | 1.பிரதோஷம் (மாதம் இருமுறை) 2. கிருத்திகை (ஆறுமுகர் சன்னதி) 3.சதுர்த்தி (ஸ்ரீ விநாயகர் ) |
| 23. | பருவ பூஜைகள் விவரம் | : | பருவ பூஜைகள் இல்லை |
| 24. | வருட பூஜைகள் விவரம் | : | கார்த்திகை சோமவாரம், தனுர் மாத பூஜை, ரதசப்தமி, தைப்பூசம், மாசி மகம், மகர சங்கராந்தி, |
| 25. | பிரம்மோற்சவம் பற்றிய குறிப்பு எத்தனை நாள் முக்கியத்துவம் குறித்து | : | 13 நாட்கள், பங்குனி உத்திரத் திருக்கல்யாண பிரம்மோற்சவம். |
| 26. | வாகனங்கள் குறித்த விவரம் ? எத்தனை நாள் முக்கியத்துவம் குறித்து | : | பிரம்மோற்சவம் போது 5 ம் நாள் காலை அதிகாரநந்தி சேவை, 5 ம் நாள் இரவு இராவணேஸ்வரன், 6 ம் நாள் வெள்ளித் தேர், 9ம் நாள் இரவு மாவடி சேவை , 12 ம் நாள் இரவு பஞ்சமூர்த்திகள், 11 ம் நாள் காலை தங்க ரிஷபம், 11ம் நாள் இரவு ரூத்ரகோடி விமானம் |
| 27. | பிரார்த்தனைகள் பற்றிய விவரம் | : | தலவிருட்சம், மாமரத்தில் குழந்தைப் பேறு வேண்டி தொட்டில் கட்டுதல் , திருமணம் நடைபெற பிரார்த்தனை செய்து அர்ச்சனை செய்தல். |
| 28. | பக்தர்கள் மேற்கொள்ளும் பிராத்தனை விவரம் | : | மாவடி சன்னதியில் திருமணம், குழந்தைப் பேறு வேண்டி பிரார்த்தனை செய்தல். |
| 29. | கல்வெட்டுச் செய்திகள் | : | 1. கி.பி. 1115 ல் இரண்டாம் இராசராசன் ஆட்சியில் விஷ்ணு தேவன் அளித்த தர்மம்.<br>2. கி.பி. 1160 இரண்டாம் இராஜராஜன் பதினைந்தாம் ஆட்சி ஆண்டின் செய்த தர்மங்கள் 19ம் ஆட்சிக் |

காலத்தில் நந்தா விளக்கு எரிய 32 பசுக்களை அளித்தது பற்றிய குறிப்பு.

3. மூன்றாம் குலோத்துங்கள் 27 ம் ஆட்சி கண்ட கல்வெட்டு கி.பி. 1178–1218
4. 1265 ம் ஆண்டு விஜய கோபால தேவர் விளக்கு எரிய தர்மம்.
5. விக்ர சோழன் கல்வெட்டு கி.பி. (1122)
6. முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் கல்வெட்டு கி.பி (1231)
7. விஜய நகர அரசர் ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் சிற்பம் அரசவை

30. புராண செய்திகள் — ஸ்ரீ காமாட்சியம்மை கம்பா நதியில் மணலால் லிங்கம் அமைத்து பூசித்து இறைவனை திருமணம் செய்து கொண்ட இடம்.

31. வரலாற்றுச் செய்தி : இத்திருக்கோயில் பல்லவ அரசர்களாலும், கரிகால சோழனாலும், கிருஷ்ண தேவராயராலும் கட்டப்பட்டது. பல்வேறு சிறப்பம்சங்களை கொண்ட ஆயிரங்கால் மண்டபம் உள்ளது.

32. தல புராணம் இருந்தால் அதை பற்றிய செய்திகள் : உள்ளது (தமிழில்) தற்போது அச்சில் உள்ளது.

33. இந்த கோயில் குறித்த சிறப்பு விவரங்கள் : பஞ்சபூத தலங்களில் மண் தலமாக (பிரிதிவி) பேசப்படுகிறது. மணலால் ஆன லிங்கம் ஸ்ரீ காமாட்சி அம்மை தவமிருந்து ஏகம்பனை (ஈசுவரனை)மணம் கொண்ட தலம். திருமுறையில் பாடல் பெற்ற தலம். அ/மி கச்சி மயானீஸ்வரர் சன்னதி இங்கு உள்ளது. வைப்புத்தலமாக பாடல் பெற்றது.

| | | | |
|---|---|---|---|
| 34. | சிற்ப சிறப்புகள் ஏதேனும் இருந்தால் | : | ஸ்ரீ காமாட்சியம்மை தவசு செய்து இறைவனை (ஈசுவரனை) கண்களை பொத்தியது. |
| 35. | உதிரி சிற்பங்கள் ஏதேனும் இருந்தால் தகவல் | : | உதிரி சிற்பங்கள் இல்லை |
| 36. | பயன்பாட்டில் இல்லாத தொன்மையான மர வாகனங்கள் சாமான்கள் | : | ஏதும் இல்லை |
| 37. | விலை மதிப்புமிக்க வாகனங்கள், பாத்திரங்கள் போன்ற விவரங்கள் | : | வெள்ளித் தேர், வெள்ளி மாவடி, வெள்ளி ரிஷபம், வெள்ளி, அதிகார நந்தி சேவை |
| 38. | தொடர்புடைய ஆழ்வார்கள், நாயன்மார்கள், ஆச்சார்யார்கள் அவர்களை பற்றிய தனிக்குறிப்பு | : | முதல் பிரகாரத்தில் காஞ்சியில் முக்தி பெற்ற 1. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் 2. ஐயடிகள் நாயனார், 3.காடவர்கோன், 4. சாக்கிய நாயனார். |
| 39. | திருக்கோயில் எத்தனை காலத்திற்கு முந்தியது என்ற விவரம் ஆதாரத்துடன் | : | திருமுறையில் பாடல் பெற்றது. எனவே 6ம் நூற்றாண்டுக்கு முந்தையது. |
| 40. | விமானத்தின் பெயர் மற்றும் எண்ணிக்கை | : | 1.மூலவர் விமானம், 2. உற்சவர் விமானம், 3. நடராஜர் சன்னதி விமானம், 4.மாவடிச் சன்னதி விமானம், 5.பஞ்சமுக விநாயகர் விமானம், 6.கச்சி மாயானேஸ்வரர் விமானம், |
| 41. | வேறு ஏதேனும் குறிப்புகள் | : | 1. 192 அடி உயரமுள்ள 9 நிலை கொண்ட தெற்கு இராஜகோபுரம் ஸ்ரீ கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்டது. 2. 1000 ம் கால் மண்டபம் அமைந்த திருக்கோயில் |